**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(17.09.2024 முதல் 21.09.2024)**

**அறிக்கைஎண் 49/2024** **தேதி. 16.09.2024**

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

திருவாரூர் மாவட்டத்தின் 13.09.24 முதல் 15.09.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 37 - 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 29 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 76 தவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் திசையிலிருந்து மேற்கு தென் மேற்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை திருவாரூர் (17.09.2024 முதல் 21.09.2024)

| கடந்த வார வானிலை (13.09.2024 முதல் 15.09.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 21.09.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/09 | நாள்-2 14/09 | நாள்-3 15/09 | தேதி | நாள்-1 17/09 | நாள்-2 18/09 | நாள்-3 19/09 | நாள்-4 20/09 | நாள்-5 21/09 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 1 | 0 | 0 | 0 |
| 37 | 39 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 39 | 39 | 40 | 40 | 40 |
| 29 | 29 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 29 | 29 | 29 | 30 |
| 6 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 6 | 5 | 0 |
| 72 | 68 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 60 | 70 | 60 |
| 62 | 62 | 61 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 40 | 40 | 30 | 30 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 16 | 16 | 18 | 20 | 18 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றுவீசும் திசை | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு |

## திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 17.09.2024 மற்றும் 18.09.2024 ஆகிய நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 39 - 40 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 30 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 – 70 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 30 - 40 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. சுராசரியாக காற்று மணிக்கு 16 - 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் | அறுவடை | அறுவடை நிலையில் இருக்கும் குறுவை நெற்பயிரை அறுவடை செய்யவும் |
| | நடவு வயல் | நிலவும் வானிலையை பயன்படுத்தி சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும் |
| தென்னை | காய்க்கும் பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | பசு | மாட்டு கொட்டகையில் மழை காலங்களில் கொசுக்கள் அதிகமாக இருப்பின் நொச்சி இலை புகை மூட்டம் போடவேண்டும். ஏனெனில் இது பால் சுகாதாரத்தை பாதிக்ககூடும். |

## குறுஞ்செய்தி

அறுவடை நிலையில் இருக்கும் குறுவை நெற்பயிரை அறுவடை செய்யவும்

**இயக்குநர்**